1972 டிசம்பர் 14]

புணர்ச்சி இழந்திருப்பதுதான். அப்படி இருப்பவர்கள் எளிய சாதாரண நிலையிலிருப்பதால், அவர்கள்மீது அந்தக் குற்றச்சாட்டை வைத்து நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. அவ்வப்போது சென்று பார்வையிட்டு, ஒவ்வொரு பொறுப்பிலும் குறைகள் இருந்தால், சுட்டிக்காட்டுவதற்கு அந்த இலாக்காவில் அதற்கென்றே தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்பார்வைச் செலவு பொது மக்களுக்கு ஆகின்ற பணிச் செலவை நோக்க மிகக் குறைவாகவே இருக்கவேண்டும். அதிகம் ஆகக் கூடாது என்ற காரணத்தினுல் அதை அதிகமாக்க முடியவில்லை. மேற்பார்வைக்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஆ. பரந்தாமன் : மருத்துவ மனைகளுக்கு வழங்குகின்ற பாலையும் மற்ற உணவுப் பொருள்களையும் முன்னதாகவே பரிசோதிக்க மருத்துவர்கள் இருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உள்ளபடியே பால் தரமான பாலா என்று சோதிக்கப்படுகிறது. ஸ்பெசிபிக் கிராவிட்டி, அடர்த்தி பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் பாலைப் பார்த்தாலே அதன் தரம்பற்றித் தெரியும். சந்தேகம் ஏற்பட்டால் பரிசோதிக்க முடியும். மருத்துவ மனைகளில் கொடுக்கப்படும் பாலே கெட்டதாக இருந்தால், பிறகு மக்கள் பாலும் சாப்பிட முடியாது, மோரும் சாப்பிட முடியாது. ஒவ்வொரு வீட்டிலும் பரிசோதிக்க முடியாது. மனிதனே ஒரு பரிசோதனைச் சாலையாக இருக்கிருன், இந்தப் பரிசோதனையிலே அவன் வெற்றி பெறுவான் என்று கருதுகிறேன்.

இராணிப்பேட்டையில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்குக் கட்டடம்

***170. வினு—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்காக இராணிப்பேட்டையில் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீட்டு தொகை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ரூ. 15 இலட்சம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும்? அது முடிவடைந்தால், அங்கே கால்நடை மருத்துவ ஆராய்ச்சியை எப்பொழுது ஆரம்பிக்கத் திட்டமிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே ஏறத் தாழ 3-லே 2 பங்கு அளவு கட்டிடப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்தக் கட்டிடப் பணிக்கு 11—8—1972 அன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டிடம் முடிந்ததற்குப் பின்னரும் குளிர்சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும். ஏனென்றால், வாக்சின், சீரம் போன்ற பொருள்கள் பாதுகாத்து வைக்கப்படுவதும் அது போன்று மருந்துப் பொருள்கள் பாதுகாத்து வைக்கப் படுவதும் மிக அவசியம். எனவே, அதற்கான விரிவான திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. அவைகள் அனைத்தையும் சேர்த்து அங்கே முறையாக அமைக்க இன்னும் சில காலமாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the names of places where arrangements have been made to carry on Veterinary research work in our State ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Most of the vaccines are prepared only at Ranipet in the Veterinary Research Institute. Other research stations are connected with farm work concerning Animal Husbandry.

திரு. கா. வேழவேந்தன் : இந்த ராணிப்பேட்டையில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் தயாரிக்கப்படுகிற மருந்துகளுக்கு மற்ற மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இதை விரிவுபடுத்தும் அளவில் ஆய்வு செய்யப் படுகிற இந்த மருந்துகளையும் அதிகமான அளவில் உற்பத்தி செய்ய அரசு முன் வருமா ? அதற்கு என்று ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த அடிப்படையில்தான் ஏற்கனவே உள்ள கட்டடமும் அதிலுள்ள அமைப்புகளும் எந்தவிதமான வளர்ச்சிக்கும் ஈடு கட்டாது என்ற நோக்கத்தோடு இந்தப் பெரிய கட்டடமும் பல்வேறு பகுதி களும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றும் தொடங்கப்பட்டு ஒவ்வொரு கட்டமாக விரிவுபடுத்த முடியும். பல்வேறு கட்டடங்களில் விரிவு படுத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

THIRU B. VENKATASWAMY : Sir, cross-breed animals are getting foot and mouth disease and many of them have died due to that disease. So may I know whether there is any proposal to conduct research on the foot and mouth disease at Ranipet ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : There is a section which is going on with the research programme for the prevention of foot and mouth disease. I do not know the actual position as to how far it has succeeded.